**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.120/2019</u>**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.P.சர்மிளா, பி.பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஜெகதீசன் (எ) ஜெகதீஸ்வரன் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | 55 |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 29.12.2000 தேதிய வாதியின் பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 31.12.1993 தேதிய வாதியின் தாயாரின் பெயரிலுள்ள பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 05.06.2007 தேதிய வாதி பெயரிலுள்ள பட்டா நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.3** ஆகவும், 21.06.2019 தேதிய வாதியின் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது **வா.சா.ஆ.4** ஆகவும், 21.06.2019 தேதிய வாதியின் பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீது **வா.சா.ஆ.5** ஆகவும், 06.05.2019 தேதிய தாவா சொத்திற்குரிய நில அளவு வரைபடம் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2025.04.15 12:22:15 +0530